1981 பிப்ரவரி 26]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : வேறுபாடுகள் என்று பார்த்தால் இது மின்வாரியம்; அது தனியார் பள்ளி. (சிரிப்பு) மின்வாரிய ஊழியர்கள் என்றால், அவர்களுக்கு போனஸ் போனறவை கிடைக்கும். இவ்வாசிரியர் களைப் பொறுத்தவரையில், தனியார் பள்ளி ஆசிரியர்களைப் போல் நடத்தப் படுவதால், மின்வாரிய ஊழியர்களுக்கான சலுகைகள் இவர்களுக்குப் பொருந் தாது என்பதைத்தான் நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன்.

சென்னை உயர்நீதிமன்றத்தில் தேங்கியுள்ள வழக்குகள்.

*80 **வினா—திரு. ம. சங்கரலிங்கம்** : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

சென்னை உயர்நீதிமன்றத்தில், 1978 டிசம்பருக்கு முன் பதிவு செய்யப் பட்ட, பலவகை உரிமை இயல் மேல் முறையீடுகள் (Civil Miscellaneous Appeals) குற்ற வழக்குகள் (Criminal cases) ஆகியவைகளில், தீர்ப்பு அளிக்கப்படாதவை எத்தனை ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : சென்னை உயர்நீதிமன்றத்தில் 1978 டிசம்பருக்கு முன் வரை பதிவு செய்யப்பட்டு தீர்ப்பளிக்கப்படாமல் இருக்கும் பல்வகை உரிமையியல் மேல் முறையீடுகள் மற்றும் குற்ற வழக்குகளின் எண்ணிக்கை முறையே 208, 914 ஆகும்.

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, மூன்று ஆண்டுகளுக்கு மேலாகியும் தீர்ப்பளிக்கப்படாது இருக்கும் வழக்குகளின் எண்ணிக்கை முறையே 208 மற்றும் 914 என்றிருப்பதால், அந்த வழக்குகளை மேல்முறையீடு செய்தவர்கள்—அதாவது அப்பீல் செய்தவர்கள்—பெருமளவில் பாதிப்புக்கும் சிரமத்திற்கும் ஆட்பட்டிருக்கிறார்கள் என்பதை அரசு எண்ணிப் பார்க்குமா ? காலதாமதப்படுகிற நீதி மறுக்கப்படுகிற நீதிக்கு ஒப்பாகும் என்பதை அரசு உணர்ந்து ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்ட ஓராண்டு காலத்திற்குள்ளாவது தீர்ப்பு வழங்கப்படுவதற்கான சூழ்நிலையை உருவாக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இது குறித்து அரசு ஏற்கெனவே தீர ஆராய்ந்து உயர் நீதிமன்றத்திற்குத் தனது கருத்தைத் தெரிவித்திருக் கிறது. உயர்நீதி மன்றத்தில் 25 நீதிபதிகள் வரை இருக்கலாம் என்று வரை யறை இருந்தாலும், தற்போது 20 நீதிபதிகள்தாம் இருக்கிறார்கள். மீதியுள்ள காலியிடங்களை நிரப்ப வேண்டிய நிலை இருக்கிறது. இதற்கிடையில் வழக்குகளைத் தாமதமின்றி நடத்தி முடிக்க இன்னும் சற்று துரிதமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் குறிப்பிட்ட காலத்திலேயே குறிப்பிட்ட வழக்குகளை முடிக்க வேண்டும் என்றும், அட்ஜேர்ன்மெண்ட் கேட்டால்கூட காரண காரியமில்லாமல் அனுமதி தரக்கூடாது என்றும் சொல்லி

அதைச் சற்று கடுமையாகவே நடைமுறைப்படுத்திட வேண்டும் என்று உயர் நீதிமன்ற நீதிபதிகளின் குழு முடிவு செய்து நடைமுறைப்படுத்தி வருகிறது. கூடிய வரையில் இக்குறைபாட்டை நீக்க உயர்நீதிமன்றம் தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.

(முற்பகல் 10-40)

திரு. ம. சங்கரலிங்கம்: கூடுதலாக நீதிபதிகளை நியமிப்பதில் காலதாமதம் ஏற்படக் காரணம் என்ன? உச்ச நீதிமன்றத்தின் ஒப்புதல் தேவை என்பதாலா அல்லது நீதிபதிகள் பற்றாக்குறையா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இது குறித்து மைய அரசு முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. எந்த அளவிற்கு நீதிபதிகளை நியமிக்க வேண்டுமென்று மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

டாக்டர் இரா. சனார்த்தனம்: தீர்ப்புகளை வழங்குவதில் ஏற்படக் கூடிய காலதாமதத்திற்குக் காரணம் வாய்தாக்கள் கேட்பதுதான் என்று சொல்லுகிறார்கள். * * * என்றே சிலர் இருக்கிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது. ஆகவே இவ்வளவுதான் வாய்தா கொடுக்கலாம் என்ற ஒரு கட்டுப்பாட்டை ஏற்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

THIRU K. RAMAMOORTHY: It may be a slur on the profession * * * என்ற வார்த்தை கேள்வி நேரத்தில் இருக்க வேண்டுமா? குறிப்புகளில் இருக்க வேண்டாம் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. அப்படியானால் உறுப்பினருடைய கேள்வியில் மிச்சம் என்ன இருக்கிறது?

டாக்டர் இரா. சனார்த்தனம்: இவ்வளவுதான் வாய்தா கொடுக்கலாம் என்ற கட்டுப்பாட்டை ஏற்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: வாய்தாக்கள், பல நேரங்களில் காரணங்களின் அடிப்படையில்தான் கொடுக்கப்படுகின்றன. காலதாமதத்தைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காகத்தான், இன்றியமையாத, தவிர்க்க

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

1981 பிப்ரவரி 26]

முடியாத காரணங்களுக்காக வாய்தா கேட்கவில்லையென்றால், வாய்தா கொடுக்கக் கூடாது என்று தற்போது நடைமுறையில் கடைப்பிடித்து வருகி றார்கள்.

திரு. செ. முத்துசாமி : நீதிமன்றங்களில் காலதாமதம் ஏற்படுவதைப் போல நிர்வாகங்களிலும் காலதாமதம் ஏற்படக் கூடிய சூழ்நிலை இருப்பதால், நிர்வாகத்தில் ஒரு முறையீடு மனு வருமானால், அதை இத்தனை காலத்திற் குள் முடித்தாக வேண்டும் என்று சொல்லக்கூடிய அளவிற்கு ஒரு சட்டத்தை சட்ட அமைச்சர் அவர்கள் கொண்டு வருவார்களா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் அரசி னுடைய குவாசி-ஜுடிஷியல் ஃபங்ஷனைப் பற்றிக் குறிப்பிடுகிறார் என்று நினைக்கிறேன். எங்கெங்கு, எந்தெந்த இடங்களில் காலதாமதம் இருக்கிற தென்று தெரிவித்தால், அது குறித்து அரசு பரிசிலனை செய்யும்.

தீர்ப்பளிக்கப்படாத—நீதிப் பேராணை மனுக்கள்.

* 81 வினா.—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

சென்னை உயர்நீதிமன்றத்தில் 1978 டிசம்பருக்கு முன் பதிவு செய்யப் பட்ட, நீதிப்பேராணை (Writ petitions) மனுக்களில் தீர்ப்பளிக்கப்படா மல் எத்தனை இருக்கின்றன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : சென்னை உயர்நீதி மன்றத்தில் 1978 டிசம்பருக்கு முன்வரை பதிவு செய்யப்பட்டு தீர்ப்பளிக்கப்படாமல் இருக்கும் நீதிப்பேராணை மனுக்களின் எண்ணிக்கை 1929 ஆகும்.

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, ஒருவருடைய தனிப்பட்ட உரிமை பாதிக்கப்பட்டிருப்பதால், தன்னுடைய உரிமைப் பிரச்சினையைப் பற்றி நீதி வேண்டி ரிட் மனுவைப் போடுகிறார். அப்படி உரிமைக்காக நீதி வேண்டி வருகிறபோது, மூன்றாண்டுகளுக்கு மேலாக சுமார் இரண்டாயிரம் வழக்குகள் தீர்ப்பு அளிக்கப்படாமல் இருந்தால், உண்மையில் அவர்களுடைய உரிமையை மறுப்பதாக ஆகாதா ? ஆகவே அரசு இத்தகைய காலதாமதத்தைத் தடுக்க என்ன நடவடிக்கையை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : நான் ஏற்கெனவே பதில் சொன் னதைப் போலவே, அரசுக்கும் இதற்கும் நேரிடைத் தொடர்பு இல்லை. உயர்நீதி மன்றத்திடம் அரசு இது குறித்து கேட்கலாம். உயர்நீதி மன்றத்தி னிடம் இது குறித்து கேட்கப்பட்டிருக்கிறது. 1975 ஆம் ஆண்டைச் சேர்ந்த